0 4 9

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 5
இறுதிப் பரீட்சை – 2006/2007
நிர்வாக சட்டம் - LWU 3311/ 4331
காலம்: மூன்று மணித்தியாலம்

திகதி: 16.03.2007 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. " இயைபாக்கும் நியதிச்சட்டத்தில் பரிகாரங்கள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் நிர்வாக தீர்மானம் ஒன்றினால் பாதிப்படைந்த பிரஜை ஒருவருக்கு நீதிமன்றத்தில் இருந்து நியாயம் பெறுதலானது தடைசெய்யப்பட மாட்டாது. அங்கீகரிக்கப்பட்ட சிறந்த அரசியலமைப்பு கோட்பாடுகள் நிர்வாக நடவடிக்கைகளின் நீதிமுறை மீளாய்வுக்கு ஒரு அடிப்படை அத்திவாரத்தை வழங்குகிறது".

   நீதிமுறை மீளாய்வின் அரசியலமைப்பு அடிப்படையை கொண்டு இக் கூற்றினை ஆராய்க.

2. பாராளுமன்ற சட்டம் ஒன்றின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க அமைப்பான வீதி அபிவிருத்தி சபைக்கு(RDA) அதிகாரங்கள் பிறவற்றுடன், பிரதான வீதிகளை விஸ்தரித்தல் புணரமைப்பு செய்தல் ஆகிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. பனாவிலையில் இருந்து அவிசாவளை வரையான பிரதான வீதியில் 10 கி.மீ பிரதேசத்தை மீள்நிர்மாணம் செய்வதற்குரிய பொறுப்பை RDA ஏற்றுக்கொண்டது. பனாவிலை பிரதேச வாசிகள், வைத்தியசாலை, பாடசாலை, பொலிஸ் நிலையம் மற்றும் அவர்களுடைய வேலைத்தளங்கள் ஆகியவற்றை அணுகக்கூடிய ஒரே ஒரு வீதி இதுவாகும். இவ்வீதி கடந்த பல வருடங்களாக மிக மோசமான வகையில் பாதிப்படைந்து இருந்ததுடன் பொது போக்குவரத்திற்கு பாரிய சிரமங்களையும் ஏற்படுத்தியது. முச்சக்கரவண்டிகள் மற்றும் லொறிகள் மாத்திரமே இவ்வீதியை பயன்படுத்தக்கூடியதாக இருந்தது.

   பனாவிலை பிரதேச வாசிகள் இவ்வீதியை சீர்திருத்துமாறு கோரி RDA இடம் பலதடவைகள் எழுத்துமூலமாக வேண்டினர். எனினும் இதுவரை இவ்வீதியை மீள்நிர்மாணம் செய்வதற்குரிய எந்த நடவடிக்கையும் RDA மேற் கொள்ளவில்லை. தற்போது பனாவிலை பிரதேச வாசிகள் RDA ற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள விரும்புவதுடன் இவ்விடயம் தொடர்பில் உமது ஆலோசனையை நாடுகின்றனர். அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

3. விக்டர் ருரிட்டானியா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தை சேர்ந்த மூன்றாம் வருட மாணவன் ஆவான். 22.12.2006ஆம் திகதியன்று, அதே பீடத்தை சேர்ந்த முதலாம் வருட மாணவன் ஒருவனை பகிடிவதை செய்தமைக்காக பகிடிவரை தடைச்சட்டத்தின் கீழ் அவன் குற்றம்சாட்டப்பட்டான். சம்பவத்தை கண்ட சிரேஷ்ட மாணவ ஆலோசகர் சாட்சியம் வழங்க முன் வந்தார். பல்கலைக்கழக உபவேந்தர் இவ்விடயத்தை விசாரனை செய்ய குழுவென்றை நியமித்தார். அக்குழுவானது சிரேஷ்ட மாணவ ஆலோசகரையும், ஏனைய பீடங்களை சேர்ந்த இரண்டு

கல்வியாளர்களையும் உள்ளடக்கி இருந்தது. 26.01.2007 அன்று விசாரணையை மேற்கொள்ள குழு திர்மானித்ததுடன் விக்டருக்குரிய குற்றச்சாட்டு பத்திரம் விசாரணைக்கு மூன்று நாட்கள் முன்பதாக தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது. விக்டர் தனக்குரிய குற்றச்சாட்டு பத்திரத்தை விசாரணைக்கு ஒரு நாள் முன்னரே பெற்றான். விக்டர், தனது வழக்கிற்கு தயார்படுத்த போதிய கால அவகாசம் இல்லை என கூறி விசாரனையை ஒத்தி வைக்குமாறு குழுவிடம் வேண்டினான். எனினும் அவ்வேண்டுகோலை குழு நிராகரித்தது.

விசாரணையின் போது சட்ட பிரதிநிதித்துவம் ஒன்றை பெற்றுக்கொள்ள தனக்கு அனுமதி வழங்குமாறு குழுவிடம் வேண்டினான். இவ் வேண்டுதலை விசாரணை குழுவினால் மறுக்கப்பட்டது. விசாரணையின் போது நேரில் கண்ட சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்குமாறு விக்டர் குழுவிடம் வேண்டினான். எனினும் அவனுக்கு அனுமதி வழங்க குழு மறுத்தது. விசாரனை மூன்று மணி நேரம்வரை நீடித்ததுடன், குழு தமது தீர்மானத்தை உபவேந்தருக்கு வழங்கியது. குழுவினுடைய அவதானிப்புகளை அடிப்படையாக கொண்டு உபவேந்தர் விக்டரை பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு வருடத்திற்கு இடைநிறுத்தினார்.

குழுவினுடைய தீர்மானத்தில் திருப்தி அடையாத விக்டர் உபவேந்தருடைய தீர்மானத்தை சட்ட நீதி மன்றம் ஒன்றின் முன் ஆட்சேபிக்க முடியுமா எனக்கோரி உம்மை கலந்து ஆலோசிக்கிறான். விக்டருக்கு ஆலோசனை வழங்குக.

4. "இலங்கை நீதித்துறையின் அண்மைக்கால முரண்பாடான தீர்ப்புகள், நிர்வாக நடவடிக்கைகளுக்கு எதிராக விளம்பல் கட்டளை பெறுதல் தொடர்பான விடயத்தில் நிட்சயமற்ற தன்மையை தோற்றுவித்துள்ளது".

நீர் எற்றுக்கொள்கிறீரா? தீர்க்கப்பட்ட வழக்குடன் ஆராய்க.

5. இயற்கை அனர்த்த இழப்பீட்டு சபை (NDCB) பாராளுமன்ற சட்டத்தின் கீழ் அதிகாரங்கள் பிறவற்றுடன், இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த கட்டிடங்ள், வீடுகள் என்பவற்றை மீளநிர்மாணம் செய்வதற்குரிய நட்டஈட்டினை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நியதிச்சட்டம் அமைப்பாகும். இச்சட்டத்தின் கீழ் பின்வருமாறு ஏற்பர்டு செய்யப்பட்டிருந்தது. சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட அமைப்பான இயற்கை அனர்த்த முகாமைத்துவ குழுவினுடைய அறிக்கையை பெற்ற பின்பு, இழப்பீடு வழங்குவதற்குரிய அதிகாரம் சட்டத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இச் சட்டத்தின் ஏற்பாடுகளில் ஒன்று "சபையுடைய தீர்மானம் முற்றும் முடிவானது அத்துடன் எந்த சட்ட நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்த முடியாது". ஏன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் ஒன்றினால் பாதிப்படைந்த தனது வீட்டை மீள நிர்மாணிப்பதற்காக காலியில் உள்ள பத்தேகம என்ற பிரதேசத்தை சேர்ந்த பெரேரா என்பவன் விண்ணப்பம் ஒன்றை மேற்கொண்டான். எவ்வாறாயினும் குழுவினுடைய அறிக்கையை பெற்ற பின்பு சபைத்தலைவர் விண்ணப்பத்தை நிராகரித்தார். எனினும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை சபைத்தலைவர் வழங்கவில்லை.

எவ்வாறாயினும் தனது கிராமத்தை சேர்ந்த பிரதேச வாசியான சில்வா என்பவனுக்கு NDCB யால் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அவன்

சபைத்தலைவருடைய சக மாணவன் என்ற விடயத்தையும் பெரேரா பின்னர் கண்டுபிடித்தான்.

பெரேரா தனக்கு இருக்கக்கூடிய பரிகாரங்கள் பற்றி அறிந்து கொள்ள உம்மை கலந்தாலோசிக்கிறான். அவனுக்கு ஆலோசனை வழங்குக.

6. நாட்டைப் பாதுகாப்பதற்காக நடைபெற்ற போராட்டத்தில் தமது பெற்றோரில் ஆகக்குறைந்தது ஒருவரை இழந்த ஒவ்வொரு நபருக்கும் மாதாந்த கொடுப்பனவு வழங்குவதற்கான கொள்கையொன்றை சுமிலாந்து அரசு அறிமுகப்படுத்தியது. இந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு சுமிலாந்து பாராளுமன்றம் குடும்ப உதவிகள் சட்டம் 2006 என்ற சட்டத்தை ஆக்கியது. இச்சட்டம் "போராட்த்தில் தமது பெற்றோரை இழந்த 18வயதுக்கு குறைவான ஒவ்வொருவரும், (அவன்/அவள்) 200 $ மாதாந்த கொடுப்பனவு ஒன்றுக்கு உரித்துடையவராவர் என ஏற்பாடு செய்திருந்தது. மேலும், மாதாந்த கொடுப்பனவு ஒன்றை பெற தகுதியான ஒவ்வொருவரும் தமது விண்ணப்பத்தை குடும்ப உதவிகள் சபைக்கு மேற்கொள்ள வேண்டுமெனவும் சபை யுடைய ஒவ்வொரு தீர்மானமும் இறுதியானதும் முடிவானதும் ஆதல் வேண்டும் என்பதுடன் எந்த சட்ட நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்த முடியாததொன்றாகும் என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போராட்டத்தில் தனது மகவேற்பு பெற்றோரை இழந்த மைக்கல் என்பவன் சபைக்கு விண்ணப்பம் ஒன்றை மேற்கொண்டான். இப்பிரிவானது போராட்டத்தில் இயற்கை பெற்றோரை இழந்த நபர்களுக்கு மட்டுமே ஏற்புடைத்தானது என பொருள் கோடல் செய்து மைக்கலுக்கு இந்த நலனை வழங்க சபை மறுக்கின்றது. மைக்கல் தான் சட்டரீதியாக மகவேற்கப்பட்ட மகன் எனவும் அதன்நிமித்தம் தான் இச்சட்டத்தின் கீழ் நட்டஈட்டை பெற உரித்துடையவன் எனக் கூறுகிறான். எவ்வாறாயினும் தனது தீர்மானம் இறுதியானதும் முடிவானதும் என சபை கூறுகிறது.

சபையின் தீர்மானத்தை சட்ட நீதிமன்றமொன்றில் தன்னால் ஆட்சேபிக்க முடியுமா என அறிந்து கொள்ள மைக்கல் உமது ஆலோசனையை நாடுகிறான்.

சுமிலாந்தினுடைய நீதிமுறை பொருள்கோடல் சட்டம் இலங்கையின் இலக்கம் 18,1972ஆம் ஆண்டு நீதிமுறை பொருள்கோடல்(திருத்தப்பட்டவாறான) சட்டத்தை ஒத்தது என கருதி அவனுக்கு ஆலோசனை வழங்குக.

7. (அ) புரோலாந்தின் தேசிய துறைமுக அதிகார சபை சட்டம் கப்பல் செப்பனிடல் துறை ஊழியர்களின் ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பான உப விதிகளை ஆக்குவதற்குரிய அதிகாரத்தை துறைமுக அதிகார சபைக்கு வழங்குகிறது. அச்சட்டத்தின் ஒரு ஏற்பாடு, அதிகார சபையின் தீர்மானத்தினால் திருப்தியுறாத திறத்தவர்கள் அதிகார சபை தீர்மானம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து 30 நாட் காலப்பகுதிக்குள் துறைமுகத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு மேன்முறையீடு ஒன்றை மேற்கொள்ளலாம் என குறிப்பிடுகின்றது.

அதிகார சபை உபவிதியொன்றை ஆக்கியது. அவ் உபவிதியில் எதிர்கால மேன்முறையீடுகள் யாவும் அதிகார சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு சபைக்கு மேற்கொள்ள வேண்டும் எனவும் மேன் முறையீட்டு சபையினுடைய தீர்மானம் இறுதியானது என குறிப்பிடப்பட்டிருந்தது. அதிகார சபையின் தலைவர் கப்பல் செப்பனிடும்

துறை ஊழியர்களுல் ஒருவரனான கோர்டன் என்பவனை துர்நடத்தை அடிப்படையில் அவனுடைய வேலையில் இருந்து நீக்கினார். மேன்முறையீட்டு சபையிடம் மேற்கொண்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது. தலைவருடைய தீர்மானத்தை கேள்விக்குட்படுத்த முடியுமா என்பது தொடர்பிர் கோர்டன் கலந்தாலோசிக்கிறான். கோர்டனுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) "பகிரங்க அதிகார சபைகள் தமது நடவடிக்கைகளை வசதி மற்றும் அவசிய தேவை கருதி உபசட்டவாக்க சபைகளிடம் கையளிப்பதை அனுமதிக்க வேண்டும் என்பது அடிக்கடி தேவைப்படுத்தப்படுகிறது. எனினும் நலன்புரி அரசொன்றில் கையளிக்கப்பட்ட சட்ட வாக்கத்தை நீதிமுறை மேற்பார்வையின் கீழ் வைத்திருத்தலானது அவசியமானதொன்றாக விளங்குகிறது".

கருத்துரைக்க.

8. "முனைப்புறு எழுத்தாணை ஒன்றை கோரும் ஒரு விண்ணப்பதாரி தான் பரிகாரத்தை கோருகின்றேன் என்ற அடிப்படையிலோ அல்லது உரிமை என்ற வகையிலோ அல்லது ஒரு நடைமுறை வழக்கம் என்ற வகையிலே அப்பரிகாரத்திற்கு உரித்துடையவராகார். அவன் பரிகாரத்திற்கு உரித்துடையவனாக இருந்த போதிலும் நிவாரணம் வழங்குவதற்கு எதிராக இருக்கக் கூடிய அவனுடைய நடத்தை, கால தாமதம், காலக் கழிவு, நியாயாதிக்கம் ஆகிய அனைத்து வலிதான தடைகளையும் கருத்திற் கொண்டு நீதி மன்றம் நிவாரணத்தை மறுப்பதற்குரிய தற்துணிவைக் கொண்டுள்ளது".

Principles of Administrative Law in Sri Lanka by Sunil F.A.Coorey பக்கம் 478.

தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் இக்கூற்றை விமர்சித்து ஆராய்க.

(பதிப்புரிமைபெற்றது)